**எ.ம.சா.1–பழனிச்சாமி** **Trust.O.P.No. 61/2023** **26.09.2025**

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் பழைய கால கல்விமுறையில் 10 ம் வகுப்பு படித்துள்ளேன். எனது தகப்பனார் பெயர் முத்தையா தேவர். எனது தாத்தா பெயர் சண்முகசுந்தர தேவர். எனது தாயார் பெயர் கோதையம்மாள். எனது தாயார் கோதையம்மாள் உடன் பிறந்த சகோதரி பொன்னம்மாள் என்ற பார்வதியம்மாள் ஆகும். எனது தாயார் கோதையம்மாளின் தகப்பனார் பெயர் அழகுத்தேவர் ஆகும். எனது தாத்தா அழகுத்தேவருடன் உடன் பிறந்த சகோதரர் வெங்கடாசலத்தேவர் ஆகும். எனது தாத்தா அழகுத்தேவரின் தகப்பனார் பெயர் வெங்கடாச்சாரியார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கில் எதிர்உரை தாக்கல் செய்வதற்கு நான்தான் விபரங்கள் அனைத்தும் கூறினேன் என்றால் சரிதான். நான் ம.சா.ஆ.1 17.07.1917 ம் தேதிய டிரஸ்ட் பத்திரத்தை படித்து பார்த்துள்ளேன். வெங்கடாசலத்தேவருக்கு சீமான் சீனிவாசக தேவர் என்ற ஒரே ஆண் மகன் மட்டும்தான் வாரிசு என்றால் சரிதான். சீமான் சீனிவாசக தேவருக்கு கருமலை நாச்சியார் அம்மாள், இருளாயி அம்மாள், லட்சுமி அம்மாள் ஆகிய 3 மனைவிகள் என்றால் சரிதான். மேற்படி 3 மனைவிகள் மூலமாக சீமான் சீனிவாசக தேவருக்கு எந்த வாரிசுகளும் பிறக்கவில்லை என்றால் சரிதான். நான் வெங்கடாசல தேவருடைய சகோதரர் அழகுத்தேவரின் பெண் மக்களின் வழியில் வந்த வாரிசு என்றால் சரிதான். சீமான் சீனிவாசக தேவருக்கு ஆண், பெண் வாரிசுகள் ஒருவரும் கிடையாது. என்னுடன் உடன் பிறந்தவர்கள் ராமமூர்த்தி மற்றும் மாரியப்பன் ஆகியோர்கள். மேற்படி மாரியப்பன் தற்போது உயிருடன் இல்லை. என் குடும்பத்திற்குள் செய்து கொண்ட எ.ம.சா.ஆ.1 பாகப்பத்திரத்தில் என்னுடன் பிறந்த சகோதர் மாரியப்பன் என்பவர் இருக்கிறார் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பெரிய பாட்டிக்கு பொன்னம்மாள் என்ற பார்வதியம்மாளுக்கு சேதுராமலிங்கம் மற்றும் குருசாமி என்பவர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். சேதுராமலிங்கத்திற்கு சிங்கார

வேலன், சேது கண்ணன், கனகராஜ் ஆகிய மூன்று பேரும் வாரிசுகள் என்றால் சரிதான். சேதுராமலிங்கத்தின் மகன் கனகராஜ் என்பவர்தான் இந்த மனுவின் 3ம் எதிர்மனுதாரர் என்றால் சரிதான். கோதையம்மாள் வழி வந்த வாரிசுதான் நான் என்றால் சரிதான். பொன்னம்மாள் என்ற பார்வதியம்மாள் வழி வந்த வாரிசுதான் கனகராஜ் என்றால் சரிதான். சேதுராமலிங்கத்தின் சகோதரர் குருசாமியின் மனைவி பெயர் அன்னம்மாள் என்றால் சரிதான். எனது அப்பா உடன் பிறந்த சகோதரர் பிள்ளையார் என்ற வெங்கடாசலத்தேவர் என்றால் சரிதான். பிள்ளையார் என்ற வெங்கடசலத்தேவரின் ஒரே வாரிசு சீனிவாசகம் என்றால் சரிதான். மகாராஜபுரம் கிராமம் புஞ்சை சர்வே எண்.1223/1ல் 1 ஏக்கர் 96 செண்டும், 1223/4ல் 80 செண்டு ஆக மொத்தம் 2 ஏக்கர் 76 செண்ட் ஆகும். இந்த மனுவின் தாவா சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 ஏக்கர் 76 செண்ட் என்பது எங்களது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்றால் சரிதான். மேற்படி 2 ஏக்கர் 76 செண்ட் என்பது ஒரு செட்டியார் சமூகத்தை சார்ந்தவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 டிரஸ்ட் பத்திரமானது சிவனு செட்டியார், சங்கரலிங்கம் செட்டியார், பகவான் செட்டியார், சுப்பன் செட்டியார், சுப்பையா செட்டியார் ஆகியோர்களால் எழுதி வைக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ம.சா.ஆ.1 டிரஸ்ட் பத்திரத்தில் 2 ஏக்கர் 76 செண்ட் நிலத்தினை தர்ம காரியங்கள் செய்வதற்காக மேற்படி 5 நபர்களால் ம.சா.ஆ.1 ஆவணத்திற்கு முன்பே தர்ம காரியத்திற்காக விடப்பட்ட சொத்து என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எதிர்உரையில் மேற்படி 2 ஏக்கர் 76 செண்ட் நிலம் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டு இருந்ததாகவோ, பாத்தியப்பட்டதாகவோ கட்சி செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ம.சா.ஆ.1 டிரஸ்ட் பத்திரத்தில் 6வது டிரஸ்டியாக வெங்கடச்சலத்தேவர் என்பவரை நியமனம் செய்யப்பட்டுள்ளது என்றால்

சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ல் வெங்கடச்சலத்தேவரின் தகப்பனார் பெயர் ஸ்ரீமன் தொட்டாச்சாரியார் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ம.சா.ஆ.1 டிரஸ்ட் பத்திரத்தில் தாவா சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தை 6 வது டிரஸ்டியிடம் கொடுத்து பிரஸ்தாப தர்ம காரியத்தை மற்ற டிரஸ்டிகளின் அபிப்பிராயப்படி செலவு செய்து நடத்த வேண்டும் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ம.சா.ஆ.1 டிரஸ்ட் பத்திரத்தின்படி டிரஸ்டிகளின் மூத்த தலை ஆண் வாரிசு பரம்பரைதான் நடத்தி வரவேண்டும் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1 ல் சீமான் சீனிவாசக தேவர் 19.01.1963 ல் ஒரு பதிவு செய்யப்பட்ட தர்ம சாசன பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொன்னம்மாள் என்ற பார்வதியம்மாளின் மகன்கள் சேதுராமலிங்கம், குருசாமி மற்றும் கோதையம்மாளின் மகன்கள் முத்தையா தேவர், வெங்கடாச்சல தேவர் ஆகிய நான்கு நபர்களும் டிரஸ்டை நடத்த வேண்டும் என்று கூறி சீனிவாசக தேவர் 19.01.1963 ல் ஒரு பதிவு செய்யப்பட்ட டிரஸ்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். **அதன் சான்று நகல் ம.சா.ஆ.13 ஆகும்.** 1963 ல் எழுதி வைத்த பத்திரத்தில் மனுவில் கண்ட சொத்துக்களையும், சீனிவாச தேவருக்கு தனித்து பாத்தியப்பட்ட புதுப்பட்டி கிராமம் புஞ்சை சர்வே எண்.837/5 ல் கண்ட 1 ஏக்கர் 48 செண்ட் நிலத்தையும் சேர்த்து அதன் மூலம் டிரஸ்ட்டை நடத்த வேண்டும் என்று குறிப்பிட்டு எழுதியிருந்தார் என்றால் சரிதான். பின்னர் 1963 டிரஸ்ட் பத்திரத்தில் கண்ட சொத்துக்களில் இருந்து வரும் வருமானத்தை வைத்து வருடம் வருடம் மார்கழி மாதம் திருவாதிரை அன்று எங்களது தெருவில் உள்ள மடத்தில் உள்ள நடராஜர் படத்தை வைத்து ஊர்வலம் வர வேண்டும் என்று எழுதியுள்ளார் என்றால் சரிதான். பின்னர் 07.05.1964 ல் சீனிவாசக தேவர் மேற்படி டிரஸ்ட் பத்திரத்தை ரத்து செய்து டிரஸ்ட் ரத்து ஆவணம் பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 07.05.1964 ம் தேதிய ஆவணம் டிரஸ்ட் ரத்து

செய்ததற்கான ஆவணம் என்றால் சரிதான். **அதன் ஆன்லைன் நகல் ம.சா.ஆ.14 ஆகும்.** 1963 ல் டிரஸ்ட் பத்திரம் எழுதி வைத்த பிறகும் சீனிவாசக தேவரே தர்ம காரியங்களை செய்து வருவதாக அதில் கூறியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி சேதுராமலிங்கம் மற்றும் 4 நபர்களும் மேற்படி சாசனத்தில் கண்டபடி தர்மங்களை சரியான முறையில் நடத்த மாட்டார்கள் என்றும் மேற்படி தர்ம சாசனம் ஊர்ஜிதத்திற்கு வந்தால் மேற்படி தர்ம காரியங்கள் சரியாக நடக்காது என்று தீர்மானமாக நான் கருதுவதாலும், இதுவரை ஊர்ஜிதத்திற்கு வராத டிரஸ்ட் ஆவணத்தை ரத்து செய்வதாக சீனிவாசக தேவர் 1964 ரத்து பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ம.சா.ஆ.1 டிரஸ்ட் ஆவணத்தில் மார்கழி திருவாதிரை அன்று எங்கள் தெருவில் உள்ள மடத்தில் உள்ள நடராஜர் படத்தை வைத்து ஊர்வலம் வர வேண்டும் என்று நிபந்தனை எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 1963 டிரஸ்ட் பத்திரத்தில் புதுப்பட்டி கிராமத்தில் உள்ள சர்வே எண்.837/5 ல் அடங்கிய 1 ஏக்கர் 48 செண்ட் நிலம் ம.சா.ஆ.1 ஆவணத்தில் காட்டப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் சீனிவாசக தேவரின் 3 மனைவிகளும், பொன்னம்மாள் என்ற பார்வதியம்மாளின் மகன்கள் சேதுராமலிங்கம், குருசாமி மற்றும் கோதையம்மாளின் மகன்கள் முத்தையா தேவர், பிள்ளையார் என்ற வெங்கடாச்சலத்தேவர் ஆகிய 7 நபர்களும் செய்து கொண்ட பாகப்பத்திரம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பத்திரப்படி சீனிவாசக தேவர் அடங்கிய பொது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து பாகம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பத்திரத்தில் கண்ட 6 வது தபசில் கண்ட சொத்துக்களை வைத்து சுந்தரமகாலிங்கம் கோவில் தர்ம காரியங்களை நாமும், நம் குடும்ப வாரிசுகள் பரம்பரைகளும் செய்து வர வேண்டும் என்று சொல்லியுள்ளது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1 ல் 10 வது பக்கத்தில் சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோவில் தர்ம காரியங்களை செய்வதற்காக விடப்பட்ட

சொத்துக்கள் விபரம் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 10 வது பக்கத்தில் இந்த மனுவில் கண்ட சொத்துக்களும், புதுப்பட்டி கிராமத்தில் சர்வே எண்.819/1,3 மற்றும் 820/2,4 ல் அடங்கிய 3 ஏக்கர் 39 செண்ட் நிலமும் சேர்த்து தர்ம காரியத்திற்காக ஒதுக்கப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் குடும்ப உறுப்பினர்கள் செய்து கொண்ட மேற்படி பாகபத்திரத்தில் தாவா மனுவில் கண்ட சொத்துக்களை எதன் அடிப்படையில் சேர்த்து பாகப்பத்திரம் பதிவு செய்து கொண்டுள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எ.ம.சா.ஆ.1 பாகப்பத்திரத்தில் கண்ட 6 வது நபர் முத்தையா தேவர் என்பவர் எனது தகப்பனார் என்றால் சரிதான். 7 ம் நபர் எனது தகப்பனாரின் உடன் பிறந்த சகோதரர் பிள்ளையார் என்ற வெங்கடாச்சல தேவர் என்றால் சரிதான். 1968 பாகப்பத்திரத்தில் கண்ட தர்ம காரியத்திற்காக விடப்பட்ட புதுப்பட்டி கிராம சர்வே எண்.819/1,3 மற்றும் 820/2,4 ல் அடங்கிய 3 ஏக்கர் 39 செண்ட் நிலத்தை குருசாமி தேவர் மனைவி அன்னம்மாளுக்கு எ.ம.சா.ஆ.2 ன் படி கிரையம் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி அன்னம்மாள் எனது பெரிய பாட்டியான பொன்னம்மாள் என்ற பார்வதியம்மாளின் மகனான குருசாமியின் மனைவி ஆவார். மேற்படி குருசாமி, அன்னம்மாளுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 4 பெண்கள், 2 ஆண்கள் ஆவார்கள். மேற்படி 2 ஆண்களின் வாரிசுகளின் பெயர் பழனிக்குமார், மருதையா ஆகும். 1968 பாகப்பத்திரப்படி தர்ம காரியத்திற்காக ஒதுக்கிய இடத்தை எதன் அடிப்படையில் அன்னம்மாளுக்கு கிரையம் செய்தோம் என்றால் தாவா மனுவில் கண்ட சொத்தில் கிணறு வெட்டுவதற்காக எ.ம.சா.ஆ.2 ன்படி சொத்தை கிரையம் செய்தோம். நான் தற்போது நடத்தி வரும் டிரஸ்ட் ஆனது 1968 பாகப்பத்திரத்தின் அடிப்படையிலா அல்லது 1917 டிரஸ்ட் பத்திரத்தின் அடிப்படையிலா என்று கேட்டால் 1917 டிரஸ்ட் பத்திரத்தின் அடிப்படையில் நடத்தி வருகிறோம். 1917 டிரஸ்ட் பத்திரத்தில் சீனிவாசக தேவரின் தகப்பனார் வெங்கடாச்சல தேவர் 6 வது

டிரஸ்டியாக காட்டப்பட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வெங்கடாச்சசல் தேவருக்கு சீமான் சீனிவாசக தேவர் மட்டுமே ஆண் வாரிசு ஆகும். சீனிவாசக தேவருக்கு பிறகு 6 வது டிரஸ்டியான வெஙகடாச்சல தேவருக்கு ஆண், பெண் வாரிசுகள் யாரும் கிடையாது என்றால் சரிதான். 1917 டிரஸ்ட் பத்திரத்தில் கண்ட படி வெங்கடாச்சல தேவருக்கு நான் நேரடியான ஆண் வாரிசு கிடையாது என்பதால் தாவா சொத்தில் உள்ள டிரஸ்டை நடத்துவதற்கு எனக்கு சட்டப்படி உரிமையில்லை என்றால் சரியல்ல. உரிமை உள்ளது. வெங்கடாச்சல தேவருடன் உடன் பிறந்த அழகு தேவருக்கும் ஆண் வாரிசுகள் யாரும் இல்லை. நான் அழகு தேவரின் மகள் வயிற்று பேரன் என்றால் சரிதான். அதேபோல் 3 ம் எதிர்மனுதாரர் கனகராஜ் என்பவர் அழகுத்தேவரின் மகள் வயிற்று பேரன் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.3 ன் படி தாவா சொத்தில் அடங்கிய 30 செண்ட் நிலத்தை 1ம் எதிர் மனுதாரருக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்தில் வெங்கடாச்சல தேவர் மற்றும் அழகு தேவருக்கு தனிப்பட்ட உரிமை இல்லாத நிலையில் எதன் அடிப்படையில், மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தினை 1ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக் கொடுத்தோம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தான செட்டில்மெண்ட பத்திரத்தில் கண்ட சொத்து 1968 பாகப்பத்திரப்படி 7 நபர்களுக்கும் பொதுவாக ஒதுக்கி தர்ம காரியம் செய்வதற்காக விடப்பட்ட சொத்து என்றால் சரிதான். அதேபோல் எ.ம.சா.ஆ.3 ன்படி 1ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக் கொடுத்த சொத்தானது 1917 ல் கண்ட டிரஸ்ட் ஆவண சொத்து என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.3 ஆவணத்தினை எனது தகப்பனாரும், சண்முக சுந்தர தேவரின் மகன் வெங்கடாச்சலம் என்பவரும் சேர்ந்து எழுதிக் கொடுத்தனர் என்றால் சரிதான். மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட சொத்து மேற்படி 2 நபர்களுக்கும் 1589/1968 பாக விஸ்தி பத்திரப்படி பாத்தியப்பட்ட சர்வ சுதந்திரமாய் பாத்தியப்பட்ட சொத்து என்று

காட்டியுள்ளார் என்றால் சரிதான். அது சம்பந்தமாக நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். என்ன நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இதுநாள் வரை மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய சட்டப்படி எவ்வித நடவடிக்கையும் யாரும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அன்னம்மாளின் மகன் பழனிக்குமார் என்பவர் வத்ராப் முனிசிப் நீதிமன்றத்தில் எனக்கு எதிராகவும், 3ம் எதிர்மனுதாரர் கனகராஜ், சீனிவாசகம், சேது கண்ணன், சிங்கார வேலன், ராமமூர்த்தி ஆகியோர்களுக்கு எதிராக O.S.No.72/2024 வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் பழனிக்குமார் வழக்கிற்கும், டிரஸ்ட் வழக்கிற்கும் தொடர்பு கிடையாது.

**வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.